©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 11] CHENNAI, WEDNESDAY, MARCH 20, 2013
Panguni 7, Nandhana, Thiruvalluvar Aandu–2044

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

*Pages*

**வருவாய்த் துறை**

ஆட்சி எல்லை—திருவாரூர் மாவட்டம்—மன்னார்குடி கோட்டம்—திருத்துறைப்பூண்டி வட்டம்—புதிய முத்துப்பேட்டை வட்டம் உருவாக்குதல் .. .. 20-24

## NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய்த் துறை**

*தலைமைச் செயலகம், 2013 மார்ச் 20.*

No. II(1)/REV/11/2013.

[ஆட்சி எல்லை—திருவாரூர் மாவட்டம்—மன்னார்குடி கோட்டம்—திருத்துறைப்பூண்டி வட்டம்—புதிய முத்துப்பேட்டை வட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்பட்டது—நிதி ஒதுக்கீடு, பணியிடங்கள் பதவிகள் உருவாக்கி ஆணை வெளியிடப்படுகிறது.]

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை) எண் 53, வருவாய் (வ.நி.1(1)]த் துறை, 20 பிப்ரவரி 2013,*
*நந்தன, மாசி 8, திருவள்ளுவர் ஆண்டு—2044.]*

**படிக்கவும்:**

(1) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை—5, கடிதம் எண் ந.க. பணி 6(4)/44809/2009, நாள் 23—2—2011.

(2) அரசாணை (நிலை) எண் 118, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, நாள் 28—2—2011.

(3) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை—5, நேர்முக கடித எண் பணி 6(4)/44809/2009, நாள் 28—4—2012.

**ஆணை: எண் 53, வருவாய் [வ.நி.1(1)த் துறை, 20 பிப்ரவரி 2013, மாசி 8, நந்தன, திருவள்ளுவர் ஆண்டு—2044.]**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று, பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், திருவாரூர் மாவடத்தில் மன்னார்குடி கோட்டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் பாலையூர் குறுவட்டத்தில் உள்ள 15 வருவாய் கிராமங்கள் மற்றும் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள முத்துப்பேட்டை குறுவட்டத்தில் உள்ள 18 கிராமங்களை உள்ளடக்கிய முத்துப்பேட்டை என்ற புதிய வட்டத்தை உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலும், மேற்சொன்ன அரசாணையில், இதற்கான நிதி ஒப்பளிப்பு, பணியிடங்களுக்கான ஒப்பளிப்பு, இதர செலவினங்கள் மற்றும் அறிவிக்கை தொடர்பான ஆணைகள், அச்சமயம் நடைமுறையிலுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி மற்றும் தேர்தல் நன்னடத்தை விதிக்கான தடையாணைகள் விலக்கிக் கொள்ளப்பட்டவுடன், பின்னர் தனியே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரது கடிதத்தில், அரசாணை (நிலை) எண் 118, வருவாய்த் துறை, நாள் 28—2—2011—இன்படி, திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தை பிரித்து, புதிய முத்துப்பேட்டை வட்டம் உருவாக்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளபடி 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் தேர்தல் நன்னடத்தை விதி தற்போது முடிவுற்ற நிலையில், புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள முத்துப்பேட்டை வட்டத்திற்கான அறிவிக்கையினை **அரசிதழில்** வெளியிடுமாறும், புதிய பணியிடங்கள் மற்றும் தேவையான நிதி ஒப்பளிப்பினை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலும், Standard Pattern—படி 2 குறுவட்டங்கள் அடங்கிய முத்துப்பேட்டை வட்டத்திற்குகீழ் குறிப்பிட்டுள்ளபடி 41 பணியிடங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | மன்னார்குடி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் (1) | நிரந்தரம் (2) | தற்காலிகம் (3) | திருத்துறைப்பூண்டி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் (4) | நிரந்தரம் (5) | தற்காலிகம் (6) | மன்னார்குடி வட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை (7) | திருத்துறைப்பூண்டி வட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை (8) | முத்துப்பேட்டை வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்களின் எண்ணிக்கை (9) | முத்துப்பேட்டை வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை (10) | முத்துப்பேட்டை வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ. | **பொதுப்பிரிவு** | | | | | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | 1 | — | 1 | 1 | — | 1 | 1 | — | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | — | 2* | 2 | — | 1 | 1 | 1 | — | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | 2 | 1 | 1 | 1 | 1 | — | 1 | 1 | 1 | — | 1 |

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | மன்னார்குடி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் (1) | நிரந்தரம் (2) | தற்காலிகம் (3) | திருத்துறைப்பூண்டி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் (4) | நிரந்தரம் (5) | தற்காலிகம் (6) | மன்னார்குடி வட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை (7) | திருத்துறைப்பூண்டி வட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை (8) | முத்துப்பேட்டை வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்களின் எண்ணிக்கை (9) | முத்துப்பேட்டை வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை (10) | முத்துப்பேட்டை வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | உதவியாளர் | 8 | 7 | 1 | 6 | 6 | – | 6 | 6 | 2 | 4 | 6 |
| 5 | சரக வருவாய் ஆய்வர் | 5 | 5 | – | 3 | 3 | – | 5 | 3 | 2 | – | 2 |
| 6 | வருவாய் ஆய்வர் (வ.தொ.பெ) | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 7 | இளநிலை உதவியாளர் | 5 | 5 | – | 4 | 4 | – | 4 | 4 | 1 | 3 | 4 |
| 8 | தட்டச்சர் | 2 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 2 | – | 1 | 1 |
| 9 | ஈப்பு ஓட்டுநர் | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | 1 |
| 10 | பதிவுறு எழுத்தர் | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | 1 |
| 11 | அலுவலக உதவியாளர் | 4+5 | 4+5 | – | 4+3 | 4+3 | – | 9 | 7 | 2+2 | – | 4 |
| 12 | இரவுகாவலர் | – | – | – | – | – | – | – | – | – | 1 | 1 |
| 13 | மசால்ஜி | 1 | – | 1 | 2 | – | 2 | 1 | 1 | 1 | – | 1 |
| | **மொத்தம் ..** | **37** | **31** | **6** | **31** | **26** | **5** | **33** | **29** | **12** | **13** | **25** |

வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு ஒரு குறுவட்டத்திற்கு ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் 12:1 என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்டுள்ளது.

**ஆ. சமூக பாதுகாப்புத் திட்டம்**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தனி வட்டாட்சியர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | – | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | – | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| 4 | பதிவுறுஎழுத்தர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | 1 | – | 1 | – | – | – | 1 | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **4** | **–** | **4** | **4** | **1** | **3** | **4** | **3** | **1** | **3** | **4** |

**இ. தேர்தல் பிரிவு**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தேர்தல் துணை வட்டாட்சியர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம் ..** | **2** | **1** | **1** | **2** | **1** | **1** | **2** | **2** | **–** | **2** | **2** |

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | மன்னார்குடி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | நிரந்தரம் | தற்காலிகம் | திருத்துறைப்பூண்டி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | நிரந்தரம் | தற்காலிகம் | மன்னார்குடி வட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | திருத்துறைப்பூண்டி வட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | முத்துப்பேட்டை வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்களின் எண்ணிக்கை | முத்துப்பேட்டை வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | முத்துப்பேட்டை வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| **ஈ.** | **வட்ட வழங்கல் •பிரிவு** | | | | | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் (கு.பொ.வ.) | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 2 | – | 2 | 1 | – | 1 | 2 | 1 | – | 1 | 1 |
| 4 | ஈப்பு ஓட்டுநர் | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| 5 | அலுவலக உதவியாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **5** | **–** | **5** | **4** | **–** | **4** | **5** | **4** | **–** | **4** | **4** |
| **உ.** | **நில அளவைப் பிரிவு** | | | | | | | | | | | |
| 1 | வட்டத் தலைமை நில அளவர் | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | முதுநிலை வரைவாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | வட்டவரைவாளர் | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | – | – | – |
| 5 | சரக நில அளவர் | 5 | 5 | – | 3 | 3 | – | 5 | 3 | 2 | – | 2 |
| 6 | புல உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 | | 1 | 1 | – | 1 | 1 |
| 7 | பஞ்சாயத்து/நகர சார் ஆய்வாளர் | 1 | 1 | – | 1 | 1 | – | 1 | – | – | – | – |
| 8 | பஞ்சாயத்து புல உதவியாளர் | 2 | 2 | – | 2 | 2 | – | 2 | – | – | – | – |
| | **மொத்தம்** | **13** | **11** | **2** | **11** | **9** | **2** | **13** | **8** | **2** | **4** | **6** |
| | **கூடுதல் (அ,ஆ,இ,ஈ,உ.)** | **61** | **43** | **18** | **52** | **37** | **15** | **57** | **46** | **15** | **26** | **41** |

| | | | |
|---|---|---|---|
| (அ) | பொதுப்பிரிவு | : | 25 |
| (ஆ) | சமூகப் பாதுகாப்புத்திட்டம் | : | 4 |
| (இ) | தேர்தல் பிரிவு | : | 2 |
| (ஈ) | வட்ட வழங்கல் பிரிவு | : | 4 |
| (உ) | நில அளவைப் பிரிவு | : | 6 |
| | **மொத்தம் கூடுதல்** | **:** | **41** |

**5.** முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள முத்துப்பேட்டை வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு கீழ்க்கண்டவாறு தோராயமாக ரூ. **1,24,23,984/–** (ரூபாய் ஒரு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து இருபத்துமூவாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு மட்டும்) தொடரும் செலவினம் ஆகும் என்றும், ரூ. **2,41,53,300/–** (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தியொரு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) தொடராச் செலவினம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.

**6.** மேலே பத்தி **5–**இல் குறிப்பிடப்பட்டுள்ள முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையினை, அரசு கவனத்துடன் நன்கு பரிசீலனை செய்த பின் அதனை ஏற்று, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி கோட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், பாலையூர் குறுவட்டத்தில் உள்ள **15** வருவாய் கிராமங்கள் மற்றும் திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள முத்துப்பேட்டை குறுவட்டத்தில் உள்ள **18** கிராமங்களை உள்ளடக்கிய ''முத்துப்பேட்டை'' என்ற புதிய வட்டம் உருவாக்க வெளியிடப்பட்ட அரசாணையை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடலாம் என்றும், மேலும் அவ்வாறு புதியதாக உருவாக்கப்படவுள்ள முத்துப்பேட்டை வட்டத்திற்கு **41** பணியிடங்களுக்கு (மறுபரவலமர்த்தல் மூலம் **15** பணியிடங்கள் + புதிதாக தோற்றுவித்தல் மூலம் **26** பணியிடங்கள்) ஒப்பளிப்பு வழங்கி, இதற்கு தொடரும் செலவினமாக ரூ. **1,24,23,984/–** (ரூபாய் ஒரு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக ரூ. **2,41,53,300/–** (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

**7.** மேலே பத்தி **6–**இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(அ) பணியாளர் சம்பளங்கள்

(i) வருவாய் பணியிடங்கள் ரூ. **1,19,66,482/–**
**2053 00** மாவட்ட நிருவாகம்–**094** ஏனைய பணியாளரமைப்புகள்–I
திட்டத்தில் சேராதது–AB வட்டப் பணியாளரமைப்புகள்–**01** சம்பளங்கள்
(த.தொ.கு. **2053 00 094 AB 0102**)

(ii) நில அளவைப் பணியிடங்கள் ரூ. **1,000/–**
**2029 00** நில வருவாய்–**102** நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள்–I திட்டத்தில் சேராதது–AF நில அளவை பரமரிப்பு பணி–**01** சம்பளங்கள்
(த.தொ.கு. **2029 00 102 AF 0105**)

(iii) **குடிமைப் பொருள் பணியிடங்கள்** ரூ. **1,000/–**
**3456–00** நுகர்பொருள் வழங்கல்–**001** நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I
திட்டத்தில் சேராதது–AB மாவட்டப் பணியாளர் அமைப்பு–**01** சம்பளங்கள்
(த.தொ.கு. **3456 00 001 AB 0108**)

(ஆ) தொலைபேசி கட்டணங்கள் ரூ. **31,500/–**
**05** அலுவலக செலவுகள் **01** தொலைபேசி கட்டணங்கள்
(த.தொ.கு. **2053 00 094 AB 0531**)

(இ) மின் கட்டணங்கள் ரூ. **1,20,000/–**
**05** அலுவலக செலவுகள் **03** மின் கட்டணங்கள்
(த.தொ.கு. **2053 00 094 AB 0513**)

(ஈ) **05 05** அறைகலன் ரூ. **6,07,300/–**
**05** அலுவலகச் செலவுகள் **05** அறைகலன்
(த.தொ.கு. **2053 00 094 AB 0559**)

(உ) வாடகை செலவினங்கள் ரூ. **1,44,000/–**
**06** வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் **01** வாடகை
(த.தொ.கு. **2053 00 094 AB 0611**)

(ஊ) இயந்திரமும், சாதனமும் வாங்குதல் ரூ. **1,10,000/–**
**19** இயந்திரமும், சாதனமும் **01** வாங்குதல்
(த.தொ.கு. **2053 00 094 AB 1914**)

(எ) வாகனங்கள் வாங்குதல் ரூ. **11,12,000/–**
**21** மோட்டார் வண்டிகள் **01** வாங்குதல்
(த.தொ.கு. **2053 00 094 AB 2119**)

(ஏ) பெட்ரோலியம் மற்றும் டீசல் செலவினங்கள் ரூ. **1,68,000/–**
**45** பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்
(த.தொ.கு. **2053 00 094 AB 4500**)

(ஐ) கணினியும் துணை பாகங்களும் வாங்குதல் ரூ. **1,00,000/–**
**76** கணினியும் துணை பாகங்களும் **01** வாங்குதல்
(த.தொ.கு. **2053 00 094 AB 7614**)

(ஓ) அலுவலகக் கட்டடம் ரூ. 2,02,86,000/–
4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு–01 அலுவலகக் கட்டடங்கள்–051 கட்டுமானம்– பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–JC நிலவரி–16 பெரும்பணிகள்.
(த.தொ.கு. 4059 01 051 JC 1609)

(ஓ) வட்டாட்சியர் குடியிருப்பு ரூ. 19,32,000/–
4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு–01 அரசு குடியிருப்பு கட்டடங்கள்–106 பொது தொகுப்பு இடவசதி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலதிட்டம்–JC வருவாய்த் துறை–வீட்டுவசதித் திட்டங்கள்–16 பெரும்பணிகள்
(த.தொ.கு. 4216 01 106 JC 1601)

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு ''புது துணைப்பணி'' குறித்த செலவினமாகும். (New Instrument of Service). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச்செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2012–2013 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது.I)/வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 6–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 7248/மை.ம.ஆ.பி/2013–1, நாள் 12–2–2013–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 2309 (இரண்டாயிரத்து முந்நூற்று ஒன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU